

அலியான்ஸ்

# ஆரோக்கியா

உங்களை முழுமையாக பாதுகாத்திடும்

அலியான்ஸ் இன்சுரன்ஸ் லங்கா லிமிடட் நிறுவனம் மற்றும் அலியான்ஸ் லைப் இன்சுரன்ஸ் லங்கா நிறுவனம் (அலியான்ஸ் லங்கா என அடையாளப்படுத்தப்படும் இரண்டு நிறுவனங்கள்) ஆகியவை அலியான்ஸ் குழுமத்திற்கு சொந்தமான துணை நிறுவனங்களாகும்.

அலியான்ஸ் குழுமம், ஜேர்மனியின் மூனிச் நகரை தளமாக கொண்டு காப்புறுதி மற்றும் சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் உலகளாவிய வர்த்தக சேவைகள் வழங்குனராக திகழ்கின்ற நிறுவனமாகும்.

155,000 பணியாளர்களின் பலத்துடன் சில்லறை மற்றும் வர்த்தக தொழில்துறையில் ஏறத்தாழ 126 மில்லியன் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றி வரும் அலியான்ஸ் நிறுவனம், 70 க்கும் அதிகமான நாடுகளில் வியாபித்துள்ளதோடு (2022 ஆண்டு வரையில்) உலகின் சிறந்த வர்த்தக நாமங்களுள், காப்புறுதி துறையில் உலகின் முதல்தர வர்த்தக நாமமாக திகழ்கின்றது. அத்துடன் சிறந்த 5 ஆயுள் மற்றும் சுகாதார காப்புறுதி நிறுவனங்களுள் ஒன்றாகவும் அலியான்ஸ் நிறுவனம் திகழ்கின்றது.

## அலியான்ஸ் ஆரோக்கியா என்றால் என்ன

உங்கள் உயிரானது உங்களுக்கும், உங்கள் அன்புக்குரியவர்களுக்கும் விலைமதிப்பற்ற ஒன்றாகும். நீங்கள் தீவிர நோய்களுக்கு பொருத்தமான காப்புறுதி திட்டத்தினை கொண்டிருந்தால், நீங்கள் மற்றும் உங்கள் குடும்பத்தினர் எவ்வித நிதிச்சுமைகளும் இன்றி இவ்வாறான நிலைமைகளை கடந்திட முடியும்.

உங்கள் பாதுகாப்பினை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல் உங்களின் அமைதியான மனநிலையை உறுதி செய்யும் வகையிலேயே அலியான்ஸ் ஆரோக்கியா காப்புறுதி திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த காப்புறுதி திட்டத்தின் கீழ் 26 தீவிர விதமான நோய்களுக்கும், காயங்களுக்கும் 3 வெவ்வேறு நிலைகளில், சிறிய மற்றும் தீவிர சிகிச்சைகளுக்கான காப்பீடு வழங்கப்படுவதோடு, வாடிக்கையாளர் மீண்டும் ஆரோக்கியமாக முந்தைய நிலைக்கு திரும்புவதை உறுதி செய்திடும்.

இந்த காப்புறுதித் திட்டத்தில், தீவிர நோய் / காயத்துக்கான சிகிச்சைகளுக்கு முன்பாகவே மருத்துவ சிகிச்சைகளை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புள்ளது.

## நீங்கள் குணமடைவதற்கான பாதையை எளிதாக்கிடும்

## பிரதான அம்சங்கள்

- 3 கட்ட தீவிர நிலைகளில் காப்பீடுகளை பெற்றுக்கொள்ள முடியும்.
- நோய்கள் / காயங்களின் தீவிர நிலையில் 150% காப்பீட்டை பெற்றுக்கொள்ள முடியும்.
- தீவிர நோய் மற்றும் காயத்துக்கான பிரதான நிலை சிகிச்சையின் போது தவணைக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பு
- வைத்தியசாலை அனுமதி மற்றும் மரணத்திற்கு விரிவான காப்பீடு
- முதிர்ச்சியின் போது ஒரு தொகை பணம்.
- பிள்ளைக்கான தீவிர நோய் காப்புறுதி - விருப்பத்துக்குரியது
- தீவிர நோய் மற்றும் விபத்தினால் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டவர்களுக்கு தினசரி வைத்தியாசாலை கொடுப்பனவு

## பல்வேறு காப்பீடுகளை எவ்வித தாமதமும் இன்றி பெற்றுக்கொள்ள முடியும்.

அலியான்ஸ் ஆரோக்கியா காப்புறுதி திட்டம், பல்வேறு காப்பீடுகளை வழங்குவதில் உறுதியாக உள்ளது. குறித்த காப்பீடுகள் ஒரே தீவிர நோய் / விபத்துக்காகவோ அல்லது பல்வேறு தீவிர நோய்கள் / விபத்துகளுக்காக பல்வேறு நிலைகளில் காப்பீட்டு தொகையை பெற்றுக்கொள்ள முடியும்.

முதலாவது காப்பீட்டு தொகைக்கும் அடுத்தடுத்த காப்பீட்டு தொகைகளை பெற்றுக்கொள்வதில் எவ்வித தாமதமும் இருக்காது.

காப்புறுதி முதிர்ச்சி அடைவதற்கு முன்னர் ஏற்பட்ட மரணம் அல்லது தீவிர நிலைக்கான காப்பீட்டு தொகைகளை பெற்றுக்கொள்ள முடியும்.



| நோய்/ காயத்தின் நிலை | செலுத்தப்படும் தொகை | காப்புறுதி | |
|---|---|---|---|
| | | நோய்கள் | காயங்கள் |
| தீவிர நிலை | 150% வரை காப்பீடு செலுத்-தப்படும் | புற்றுநோய், கரோனரி ஆர்டரி பைபாஸ் அறுவை சிகிச்சை, மல்டிபிள்ஸ்களீரோசிஸ், இதய வால்வு அறுவை சிகிச்சை, உறுப்புகள் செயலிழப்பு, கோமா, சைநார் டிஸ்டிராபி | பக்கவாதம் கோமா அங்கம் செயலிழப்பு |
| பெரும் நிலை (Major Stage) | 100% வரை காப்பீடு செலுத்-தப்படும் | புற்றுநோய், கரோனரி ஆர்டரி பைபாஸ் அறுவை சிகிச்சை, மல்டிபள் ஸ்க்ளீரோசிஸ், பக்கவாதம், இதய வால்வு அறுவை சிகிச்சை, உடல் உறுப்பு மாற்றம், தீங்கற்ற மூளைக்கட்டி, கார்டியோமயோபதி, பக்டீரியல் மூளைக்காய்ச்சல், அபாலிக் சின்ட்ரோம், ஃபுல்மினன்ட் வைரல் ஹெபடைஸ் (நுரையீரல் செயலிழப்பு), அங்கம் செயலிழப்பு, கோமா,பூரண பார்வையின்மை, மோடர் நியூரோன் நோய், அரோடா அறுவை சிகிச்சை, நுரையீரல் நோயின் இறுதி கட்டம், குடல் நோயின் இறுதி கட்டம், கேள்திறன் செயலிழப்பு, பேசும் திறன் செயலிழப்பு, நுரையீரல் தமனி உயர் குருதி அழுத்தம் | அங்கம் செயலிழப்பு, பூரண பார்வையின்மை, மூன்றாம் நிலை தீக்காயம், தலையில் ஏற்பட்ட அதிர்ச்சி, கேள்திறன் செயலிழப்பு, பேசும் திறன் செயலிழப்பு |
| சிறிய நிலை (Minor Stage) | 25% வரை காப்பீடு செலுத்-தப்படும். 500,000 க்கு வரையறுக்க-ப்பட்டுள்ளது. | புற்றுநோய், கரோனரி ஆர்டரி பைபாஸ் அறுவை சிகிச்சை, மல்டிபிள் ஸ்களீரோசிஸ், பக்கவாதம், இதய வால்வு அறுவை சிகிச்சை, சிறுநீரக செயலிழப்பு, பிரதான உறுப்பு மாற்ற அறுவை சிகிச்சைகள், உறுப்புகள் செயலிழப்பு, கோமா | பக்கவாதம் கோமா அங்கம் செயலிழப்பு |

## தவணை கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பு

பிரதான கட்டத்தில் தீவிர நோயினை கண்டறியும் வேளையிலிருந்து உங்கள் எதிர்கால தவணைக்கட்டணங்கள் அனைத்தும் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படும். நீங்கள் எவ்வித கலவையுமின்றி ஆரோக்கியமான நிலைக்கு திரும்புவதை இலக்காக கொண்டு இந்த வாய்ப்பு வாடிக்கையளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## பிள்ளையின் தீவிரமான நோய்

இந்த காப்பீட்டு திட்டத்தின் மூலம் உங்கள் பிள்ளைகளுக்கு கீழ்காணும் தீவிர நோய்கள் இருக்கும் பட்சத்தில் அதற்கான காப்பீட்டை பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் இந்த காப்பீடானது, ஒரு பிள்ளைக்கு மட்டுமே பொருந்தும்.

- புற்றுநோய் (பிரதான நன்மைகள் மட்டுமே)
- பக்டீரியா மூளைக்காய்ச்சல்
- பக்கவாதம் (பிரதான நன்மைகள் மட்டுமே)
- மூன்றாம் நிலை தீக்காயம்
- தலையில் அதிர்ச்சிகரமான காயம்

## நிபந்தனைகள்

- முதன்மை காப்பீட்டாளரால் பரிந்துரைக்கப்பட்ட நபருக்கான காப்பீடு 25% ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.
- மரணத்துக்கான காப்பீடு கிடையாது
- முதன்மை காப்பீட்டாளர் தீவிரமான நிலையில் இருந்தாலோ, உயிரிழந்தாலோ அல்லது காப்புறுதி முதிர்ச்சி அடைந்தாலோ இந்த காப்பீடானது செல்லுபடியாகாது.

## தகுதிக்கான வரையறைகள்

பிள்ளை: குறைந்தபட்ச வயதெல்லை - 3 மாதங்கள்
அதிகபட்ச வயதெல்லை - 18 வயது

பிரதான காப்பீட்டாளர்: குறைந்தபட்ச வயதெல்லை - 18 வயது
அதிகபட்ச வயதெல்லை - 65 வயது

காப்பீட்டு தொகை : குறைந்தபட்சம் ரூ.100,000
அதிகபட்சம் ரூ.5,000,000

காப்புறுதி தவணை: குறைந்தபட்சம் - 5 வருடங்கள்
அதிகபட்சம் - 30 வருடங்கள்

இது ஒரு வழக்கமான ப்ரீமியம் பங்கேற்காத காப்புறுதி திட்டமாகும். இந்த காப்புறுதித்திட்டம் உங்களின் சிகிச்சைக்கான நிதி உதவிகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல் நீங்கள் பழைய நிலைக்கு திரும்புவது குறித்தும் அதிக கவனம் செலுத்துகின்றது.

Allianz

**அலியான்ஸ் லைஃப் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட்**
கம்பனி இலக்கம் : PB 3493
நிலைகள் 25-27, One Galle Face கோபுரம்,
எண் 1A, சென்டர் ரோட், காலி முகத்திடல், கொழும்பு 02.
தொ. இல. : +94 112 300 400
மின்னஞ்சல் : customerservicelife@allianz.lk
வலைதளம் : www.allianz.lk

**பொறுப்புத் துறப்பு**
இந்த துண்டு பிரசுரமானது காப்புறுதி ஆவணத்தின் முக்கிய மற்றும் குறிப்பிடத்தக்க தகவல்களை மாத்திரம் கொண்டுள்ளது. ஏனைய அனைத்து பிரதிபலன்கள், விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் விலக்குகளை அறிந்துகொள்ள அலியான்ஸ் "ஆரோக்கியா" காப்புறுதி திட்டத்தை பார்வையிடவும்.